Comp. No.

13345

12131

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதாமிர்தம்



# ஸ்ரீராமகிருஷ்ண ஸ்தோத்திரம்

(சுவாமி விவேகானந்தர்)

1. ஓம் ஹ்ரீம் ரிதம் த்வமசலோ
குணஜித் குணேட்ய :
நக்தந்திவம் ஸகருணம்
தவ பாதபத்மம்
மோஹங்கஷம் பஹுக்ருதம்
ந பஜே யதோஹம்
தஸ்மாத்வமேவ சரணம்
மம தீனபந்தோ.

2. பக்திர் பகஸ்ச பஜனம்
பவபேதகாரி
கச்சன்த்யலம் சுவிபுலம்
கமனய தத்வம்
வக்த்ரோத்ருதந்து ஹ்ருதி மே
ந ச பாதி கிஞ்சித்
தஸ்மாத்வமேவ சரணம்
மம தீனபந்தோ.

3. தேஜஸ்தரந்தி தரஸா
த்வயி திருப்த த்ருஷ்ண:
ராகே க்ருதே ரிதபதே
த்வயி ராமக்ருஷ்ணே
மர்த்யாம்ருதம் தவ பதம்
மரணோர்மி நாசம்
தஸ்மாத்வமேவ சரணம்
மம தீனபந்தோ.

4. க்ருத்யம் கரோதி கலுஷம்
குஹகாந்தகாரி
ஷ்ணாந்தம் சிவம் ஸுவிமலம்
தவ நாம நாத
யஸ்மாதஹம் த்வசரணோ
ஜகதேக கம்ய
தஸ்மாத்வமேவ சரணம்
மம தீனபந்தோ.

5. ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய
ஸர்வதர்ம ஸ்வரூபிணே
அவதாரவரிஷ்டாய
ஸ்ரீராமக்ருஷ்ணாய தே நம:

ஆதியாம் பரம அனைத்தினும் உறைவோய்
அசைவிலாய் குணங்களைக் கடந்தோய்
ஓதினோர் உளத்தில் ஒளிதரும் சுடரே
உயர்வற உயர்நலம் உடையாய்
காதலார் மோகம் களைந்திடும் கருணைக்
கழலிணை பகலிராக் கருதேன்
ஆதலால் உனையே சரணென அடைந்தேன்
அலந்தவர்க் கருள்பொலன் கழலோய்.

மேதினித் துயரந் துடைத்தருள் புனிதா
மேதரு மெய்ப்பொருள் எய்தப்
போதிய வாகும் பக்தியும் பகமும்
போற்றுசீர்ப் பஜனையும் என்ப
ஓதிடு மளவே இவையெலா மன்றி
ஒருசிறி தெனதுளத் தொளிரா
ஆதலின் உனையே சரணென அடைந்தேன்
அலந்தவர்க் கருள்பொலன் கழலோய்.

நீதமெய்ந் நெறியின் நிலையிட மேநின்
நிறையருட் கழலிணை விழைவார்
ஏதமில் ஆசை எனைத்துணை யெனினும்
எய்துவர் எளிதினின் ரஜசைத்

தீதறக் கடப்பர் மரிப்பலை தீர்ப்பர்
திருவடி மானிடர்க் கமுதாம்
ஆதலின் உனையே சரணென அடைந்தேன்
அலந்தவர்க் கருள்பொலன் கழலோய்.

பேதமைப் பிறவிப் பிணியொழி மருந்தே
பிறங்குநின் மங்கள நாமம்
தீதையும் நலமாய்த் திகழ்தரத் திருத்தும்
திரிதரும் திரைக்கடல் உடுத்த
மேதினி முடிவிற் சேர்தனி முதலே
வேறொரு களைகணிங் கில்லேன்
ஆதலின் உனையே சரணென அடைந்தேன்
அலந்தவர்க் கருள்பொலன் கழலோய்.

அறந்தலை நிறுவினை அனைத்தறன் வடிவினை
சிறந்தனை பிறந்தபல் பிறவியுள் இறைவ
இராம கிருஷ்ண நின் இணைப்பதம் அடியேன்
பராவுவன் யாண்டும் படிமிசைப் பரிந்தே.

[பொலன் - அழகு, நன்மை. மரிப்பலை - மரணம் எனும்அலை. பிறங்குதல் - ஒலித்தல், பிரகாசித்தல். களைகண் - பற்றுக்கோடு. பராவுவன் - வணங்குவேன். யாண்டும் - எப்போதும்.]

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதாமிர்தம்

**நாம்** வசிக்கும் இந்தியா தேசம் புண்ணியபூமி எனப் பெயர் பெற்றது. இத்தேசத்தின் திலகமாய் விளங்குவது வங்காள நாடு. இந்தியாவின் பெருமையை நிலைபெறச் செய்த பெரியோர் பலர் வங்காள நாட்டிலே பிறந்தனர். அந்நாட்டில் உள்ள ஹூக்ளி ஜில்லாவில், நெறி தவறாது வாழ்ந்துவந்த பிராம்மணர் குலமொன்று, சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு, மிகவும் புகழ்பெற்று விளங்கியது. அக்குலத்தில் பிறந்த க்ஷுதிராம் சட்டர்ஜி என்பவர் சத்தியம் தவறாத உத்தமராய் இருந்தார். அவர் கடவுட் பக்தியிற் சிறந்தவர். விதிவசத்தினுல் வறுமை வந்தெய்தத் தாம் பிறந்த திரைப்பூர் என்னும் கிராமத்தை விட்டுக் காமார்ப்புகூரென்னும் மற்றொரு கிராமத்திற்குச் சென்றார். இது கல்கத்தாவுக்கு

மேற்கே எண்பது மைல் தூரத்திலுள்ளது. இவ்வூரிலே க்ஷுதிராமர் சிறு குடிசை ஒன்றில் வசித்துவந்தார். ஆனாலும் அவரும் அவருடைய அருமை மனைவியாரான சந்திரமணி தேவியாரும் சுத்தமான மனத்தினராய், நல்லொழுக்கம் வாய்ந்தவராய் இருந்தமையினாலே ஊரார் அவர்களுக்கு அதிக மரியாதை காட்டிவந்தார்கள்.

சிறந்த விஷ்ணு ஸ்தலமாகிய கயாவுக்கு யாத்திரை போகவேண்டுமென்ற ஆசை க்ஷுதிராம் சட்டர்ஜிக்கு நெடுங்காலமாக இருந்து வந்தது. ஆகையால் ஒருநாள் அப் புண்ணிய க்ஷேத்திரத்திற்குத் தனியே கால் நடையாக யாத்திரை புறப்பட்டார். அநேக நாள் கழித்து அவ்விடம்போய்ச் சேர்ந்தார். சேர்ந்ததும் அளவில்லாத சந்தோஷம் அடைந்தார். அங்கு எழுந்தருளி யிருக்கும் கதாதரப் பெருமானை மனமாரத் துதித்தார். ஆநந்தத்தால் குதித்தார். அன்றிரவு அவர் நித்திரை செய்யும்பொழுது அழகிய கனா ஒன்று கண்டார். அக்கனவில், ஜோதியுடன் கூடிய திருமேனியோடு கமலக் கண்ணனாகிய கதாதரப்பெருமான் தோன்றி

ஞர். அப்பெருமான் கருணையுடன் [illegible]திராமரைப் பார்த்து, இனிமையான குரலில், "அன்ப! உன்னுடைய பக்தியை மெச்சினேன்; உலகத்திலே தர்மம் குலைந்து அதர்மம் மேலிடும்போது யான் அவதரித்து அன்பர்களைக் காத்து உலகத்தை ரக்ஷிப்பேன்; இப்பொழுது, உன்னுடைய பக்திக்கு ஈடாக யான் உனக்குக் குழந்தையாகப் பிறந்து உனது குடிசையில் தவழ்ந்து விளையாடத் திருவுள்ளங் கொண்டேன்" என்று கூறினர். அதுகேட்ட [illegible]திராம் ஆநந்தத்தில் மூழ்கினர். ஆனல் திடீரென்று அவர் மனதிலே ஓர் ஐயம் தோன்றியது. அவர் பகவானைப் பார்த்து, "சுவாமி, நான் ஏழையாயிற்றே; தேவரீருக்குத் தகுந்தபடி தொண்டுசெய்ய என்னல் எப்படி முடியும்?" என்று விண்ணப்பம் செய்தார். அப்போது பகவான், "உனக்கு அந்தக் கவலை வேண்டாம்; உன் இயல்புக்குத் தகுந்தபடி நீ செய்யும் தொண்டினை யான் மகிழ்வுடன் ஏற்பேன்," என்று கூறி மறைந்தார்.

[illegible]திராமர் ஊருக்குத் திரும்பிச் சென்று நடந்தவற்றை யெல்லாம் சந்திர

மணி தேவியாருக்குக் கூற இருவரும் பெரு மகிழ்வுற் றிருந்தனர். உலக முய்யும் பொருட்டு ஒளியுலகமாகிய விண்ணுல கத்தைவிட்டு இம்மண்ணிடை யுதிக்கக் கரு திய உத்தமனுக்குத் தாய்தந்தையராகும் பெரும் பேற்றினைப் பெற்ற பெரியாரிரு வரும் விரும்பி நோக்கியிருந்த நாளும் நெருங்கிவந்தது. 1836-ம் ஆண்டில் பெப்ர வரி மாதம் 17-ந் தேதியாகிய புதன்கிழமை யன்று இராப்பொழுதின் பெரும்பகுதி கழி யச் சந்திரமணி தேவியார் கருவுயிர்க்குங் காலங் குறுகியது. தனம் என்னும் தோழி உதவிபுரிய வைகறைப் பொழுதிலே அம்மை யார் ஓர் ஆண்மகவினைப் பெற்றார். பேரழகு வாய்ந்த அக்குழந்தையைக் கண்டு ஊரார் அனைவரும் இன்பமடைந்தனர். பெற்றோர் அடைந்த ஆனந்தம் இவ்வளவென்று சொல்ல முடியாது. அக்குழந்தைக்கு கதா தரர் என்று பெயர் இட்டனர். இவரே பிற் காலத்தில் இராமகிருஷ்ணர் என்று பெயர் பெற்றார். கண்களைக்கவரும் அழகு வாய்ந் திருந்த அக்குழந்தையைக் காணவும் அத னோடு நெருங்கிக் கொஞ்சி விளையாடவும்

நாள்தோறும் கிராமத்தார் அவரது இராமரது குடிசையை நாடி வருவாராயினர். அவரது அத்யந்த சிநேகிதரான மாணிக்கராம் என்பவர் அடிக்கடி அவரது வீட்டுக்கு வருவார். மாணிக்கராம் குழந்தையைப் பார்த்து, "இது ஒரு சாமானிய குழந்தையல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. இதன் அங்க அடையாளங்களைப் பார்த்தால், அவை அபூர்வமா யிருக்கின்றன. இந்தக் குழந்தையோடு இருக்கவே எனக்கு எப்போதும் ஆசையாயிருக்கிறது," என்பார்.

இவ்விதம் செல்வமாய் வளர்ந்துவந்த கதாதரர் தகுந்த பிராயத்தில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டார். பள்ளிக்கூடத்தில் விரைவில் அவர் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டார். ஆனால் ஏட்டுப் படிப்பைப் பார்க்கிலும் அவருக்கு இன்பமளித்தது பேரறிவு படைத்த பெரியோரது வார்த்தைகளே. ஊரில் நடைபெறும் ஹரி கதைகளை நடித்துக் காட்டும் நாடகங்கள் முதலியவைகளைப் பார்த்து வருவதில் அதிக ஊக்கம் உள்ளவராய் இருந்தார். அவருக்கு அளவற்ற ஞாபகசக்தி இருந்தது. ஒருதரம்

கேட்ட பாடல்களை மறவாது எப்போதும் பாடக்கூடிய திறமை இருந்தது. குயிலைப் போன்ற குரலுடையவரா யிருந்தார். குழந்தைப் பருவத்திலிருந்தே அவர் தெய்வபக்தியிற் சிறந்தவராய்க் கடவுள் நினைவிலே நிலை பெற்றிருந்தார்.

இயற்கைக் காட்சிகளைக் கண்டால் கதாதாருக்குக் களிப்பு அதிகம் உண்டாகும்; அதில் பேரானந்தம் பெற்று மெய்ம்மறந்து விடுவார். மழைக்காலத்தில் ஒருநாள் கருமேகம் சூழ்ந்து வானத்தை மூடியிருந்தது. மேகத்தினடியில் பால்போன்ற வெள்ளைக் கொக்குகள் கூட்டமாகப் பறந்துபோவதைக் கதாதரர் பார்த்தார். உடனே உடல் நினைவு போய்விட்டது. மூர்ச்சையாய் விழுந்து விட்டார். இந்த நிலைமையில் பிள்ளையைப் பார்த்த தாய் நெஞ்சு கலங்கினள். இது பேய் பிசாசின் சேஷ்டையோ என்று ஏங்கினள். கடவுளை வேண்டிக் கொண்டாள். நெடுநேரம் கழித்துப் பிள்ளை விழித்தெழுந்த போது தேறுதல் அடைந்தாள். இதுபோல் அவர் அடிக்கடி கடவுள் நினைவிலும் இயற்கைக் காட்சியிலும் மனம் ஊன்றி பிரக்

ளையை இழக்கத் தலைப்பட்டார். அதனால் அவருக்கு எந்தவிதமான கெடுதலும் வராம லிருப்பதைக் கண்ட பெற்றோர் மனம்தேறி இது கடவுள் செயல் என்று எண்ணி இருந் தார்கள்.

நாள் சில கழிந்தன. தெய்வப் பிறப்பின ரான கதாதரர் நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். நற்குண நல்லொழுக்கங்கள் வாய்ந்தவ ரானார். தம் வயதினருக்குத் தலைவராயிருந் தார்; பெரியோர்பால் வணக்கமுடைய வராய், எளியோர்க்கு இன்பம் ஊட்டும் குணத்தினராய், ஊரார் அனைவரையும் களிப்பிக்கும் ஒழுக்கத்தினராய் இருந்துவந் தார். இவ்வாறிருக்கும்போது, ஏழாவது வயதிலே, கதாதரர் அன்புடைய தந்தையை இழந்து மனம் நொந்தார். இப்படி மனம் நொந்த அவர், கணவரை இழந்து துயரத் துள் ஆழ்ந்த தம் தாயுடன் எப்போதும் இருந்து அவளுக்கு வேண்டிய தொண்டு செய்து தேறுதல் அளித்தார். நாள்தோறும் வீட்டில் நடந்துவந்த ரகுராமர் பூஜையைத் தாமே செய்து வரலானார். தந்தையார்

**இறந்த பின்னர்** அவரது குடும்பம் அதிக **வறுமைக்கு உட்பட்டது.** குடும்ப பாரத்தைக் கதாதரரின் மூத்த தமையனாகிய **இராம குமாரர்** என்பவர் தாங்க நேரிட்டது. இராம குமாரர் கல்வியில் தேர்ந்தவர்; சாஸ்திரங்களைக் கற்றவர். ஆதலினாலே கல்கத்தா நகரத்தை அடைந்து, அங்கொரு பாடசாலையை ஆரம்பித்து நடத்தி வரலானார்.

ஜகந்நாதத்துக்கு யாத்திரை செல்லும் சாது ஜனங்கள் காமார்ப்புகூர் சத்திரத்தில் சிலநாள் தங்கிப்போவதுண்டு. கதாதரர் அடிக்கடி அவர்களிடம் போய்ப் பழகிச் சன்மார்க்க விஷயங்களைக் கேட்டறிவது வழக்கம். அவர்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தல், நெருப்புக் கொண்டுவந்து தருதல், விறகு பொறுக்கிக் கொடுத்தல் முதலிய தொண்டுகளைச் செய்வார். சாதுக்களோடு பழகுவதால் பிள்ளை நன்மையடைவான் என்று தாயும் கவலையற்று இருந்தாள். ஒருநாள் கதாதரர் கட்டியிருந்த துணியைக் கிழித்துக் கௌபீனம் மாத்திரம் கட்டிக் கொண்டு தாயிடம் சென்று, "அம்மா, இதோ பார்; நான் சாதுவாகி விட்டேன்,"

என்று சொல்லத் தாயானவள் திடுக்கிட்டுப் போனாள். பிள்ளையை மெள்ளச் சாதுக்கள் அழைத்துக்கொண்டு போய்விட்டால் என் செய்வது என்று பயந்தவளாய், இனிச் சத்திரத்துக்குப் போகக்கூடாதெனத் திட்டம் செய்தாள். சாதுக்களோடு பழகுவதினின்றும் தடுக்கப்பட்டது கதாதரருக்கு வருத்தத்தை அளித்தது. அதை அறிந்த சாது மகான்கள் தாயின் பயத்தை நீக்கி எப்போதும்போல் சிறுவர் தம்மோடு பழகும்படி செய்து கொண்டனர். ஏனென்றால் கதாதரர் அவர்களோடு பழகுவதால் அவர்களுக்கு அளவற்ற ஆநந்தம் உண்டாகியது.

காமார்ப்புகூரிலே சிவராத்திரி திருவிழா கொண்டாட ஏற்பாடுகள் நடந்தன. ஊரார் இராப்பொழுதை நல்ல பொழுதாகக் கழிக்கத் தீர்மானித்தனர். அதற்காகச் சிவகதை ஒன்றைத் தக்க நாடகக்காரர்களைக் கொண்டு நாடகமாக நடிக்கச் செய்தனர். ஆட்டம் தொடங்கும்போது, சிவ வேஷம் தாங்கும் முக்கிய நாடகக்காரன் திடீரென்று நோயுற்றமையால் நாடகத்துக்கு வரவில்லை. என்ன செய்வார்கள்? பிறகு சிறுவர் கதா

தரர் ஞாபகம் வந்தது. அவரை அழைத்துச் சென்று சிவ வேஷம் தரிக்கச் செய்தனர். கதாதரர் தாம்பூண்ட வேஷத்தால் தம்மைச் சிவபெருமானாகவே நினைத்து, உள்ளம் ஒடுங்கியவராய்த் தெய்வ நினைவிலே திளைத்து நின்றுவிட்டார். பேச்சில்லை; மூச்சில்லை. மேடைக்குள் இருந்தவர்கள் சற்று நேரம் பார்த்துப்பின் உள்ளே தூக்கிச் சென்றார்கள். நாடகமும் கலைந்தது. இரவெல்லாம் அந்த நிலைமை கலையாதிருந்து, காலையில் கதாதரர் உலக நினைவைப் பெற்றார்.

கதாதரர் சிறுவயது முதற்கொண்டே சொன்னசொல் தவறாதவரா யிருந்தார். ஒன்பதாவது வயதிலே அவருக்கு உபநயனச்சடங்கு நடந்தது. பிராமணச் சிறுவர் பூணூல் போட்டுக்கொண்டதும் முதன்முதலிற் பிக்ஷையெடுத்துச் சாப்பிடவேண்டும். அதுவும் தம்முடைய ஜாதியாரிட மிருந்துதான் பிக்ஷையெடுக்க வேண்டும். கதாதரர் என்ன செய்தாரென்று சிந்திப்போம். அவரது தாயாராகிய சந்திரமணி தேவியாருக்குத் தனம் என்ற பெயருடைய ஒரு கொல்லமாது அன்பிற் சிறந்த தோழியாய் இருந்

தாள். இந்த அம்மாளுக்குக் கதாதரரிடமும் அளவற்ற அன்பு உண்டு. அன்பின் மிகுதியால், தாம் பூணூல் போட்டுக்கொண்டால் இந்த அம்மாளிடமே பிக்ஷை எடுப்பதாகச் சிறுவயதிலே கதாதரர் சொல்லியிருந்தார். அன்புக்கு அடைக்குந்தாழ் உண்டோ? ஆதலினாலே முன்பு தாம் வாக்களித்திருந்தபடியே அந்தம்மாளிடம் பிக்ஷை ஏற்கப் போனார். அது ஜாதி ஆசாரத்துக்கு ஒவ்வாது என்று எல்லாரும் மறுத்தனர். சொன்னவாக்கை மீறி நடக்கமுடியாதென்றும், ஜாதி ஆசாரத்தைவிட அன்புமேலானதென்றும் பிடிவாதமாய்க் கூறித் தாம் எண்ணியவாறே செய்து முடித்தார். அவருடைய மனவுறுதியைக் கண்டு உற்றார் சம்மதப்பட வேண்டியதாயிற்று. தனம் கிடைத்தற்கரிய பெரிய பாக்கியம் கிடைக்கப் பெற்றாள்.

கல்கத்தாவுக்குச் சென்ற தமையனார் இராம குமாரர் சில வருஷங்கள் தனித்திருந்து பாடசாலையை நடத்திவந்தார். அவ்வேலையுடன் தமது உணவையும் தாமே சமைத்து உண்டுவந்தார். ஆதலால், உடல்

தளர்ச்சி உற்ருர். அதனுல் இராம குமாரர் தமது இளையோராகிய கதாதரரைத் தமக்கு உதவியாக அழைத்துக் கொண்டார். கதாதரரை அழைத்துக் கொண்டதற்கு மற்ெருரு காரணம், கல்வியில் ஊக்கம் கொள்ளாத அவரை மேலே படிக்கும்படி தூண்டலாம் என்னும் நோக்கம் ஆகும். இராம குமாரர் இளையவரான கதாதரருடன் கல்கத்தாவில் வசித்துவந்த காலத்தில் அவரை அருகில் அழைத்து, " அருமைத் தம்பி கதாதரா! 'இளமையில் கல்' என்பது பெரியோர் வாக்கு; ஆகையால் கல்வியைப் பெற நீ முயலுக. படித்தால் அறிவு வளரும். படித்து ஏதேனும் வேலைக்குப் போனுல் நமது வறுமை நீங்கும். ஆதலால், தம்பி! இனியாவது வீண்காலம் போக்காமல் படிப்பிற் கவனம் வைத்துப் படித்துக் கொள்," என்று சொன்ஞர். அதுகேட்ட கதாதரர் " அன்புள்ள அண்ணு! நன்ருய்ச் சொன்ஞய்! வயிற்றை வளர்க்கும் வழிகாட்டுகின்ற கல்வியும் ஒரு கல்வியாமோ? கடவுளைக் காணும் அறிவல்லவா கல்வியின் பயன். அந்த அறிவைக் கொடுக்கும் கல்வி

தான் எனக்கு வேண்டுமே அல்லாது இந்தச் சோற்றுக் கல்வி எனக்கு வேண்டாம்," என்று விடை அளித்தார். இராம குமாரர் தம்பியின் உள்ளத்துப் பூரணமாய் நிறைந்திருக்கும் தெய்வக் காதலைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்.

கல்கத்தாவுக்கு வடக்கே, அந்த நகரத்தை ஒட்டித் தக்ஷிணேசுவரம் என்றொரு சிற்றூர் உண்டு. அவ்வூரில் இராணி ராசமணி என்ற செல்வமிகுந்த சீமாட்டி ஒருத்தி தான் கனவில் கண்ட கடவுளாணையை நிறைவேற்றப், பெரும் பொருள் செலவு செய்து பெரியதோர் தேவாலயம் கட்டுவித்தாள். புண்ணிய கங்கா நதியின் கரை ஓரத்தில் அந்த ஆலயம் அழகாகக் கட்டப்பட்டது. அவ்வழகிய தேவாலயத்தில் சிவபெருமானைப் பூஜை செய்வதற்குரிய பன்னிரண்டு சிறு கோயில்கள் ஒருபக்கம் அமைந்தன; கிருஷ்ணனும் ராதையுமாய் வீற்றிருந்து அருள் செய்யும் விஷ்ணுவின் கோயில் ஒன்று மற்றொரு பக்கம் விளங்கியது; நடுவே பராசக்தியின் வடிவாய்த் தெய்வ ஒளி வீசும் திருவுருவம் தாங்கிய காளி தேவியின் சந்நிதி அமைக்கப்பட்

டது. இக்காளி தேவியின் சந்நிதியே அந்த ஆலயத்தில் பிரதானமானது. தேவிக்கு முதல்முதல் அர்ச்சகராக அமர்ந்து தொழில் புரியும் பணியை இராமகுமாரர் ஏற்றுக் கொள்ள நேரிட்டது. அப்போது இளையவரான இராமகிருஷ்ணரும் அவரோடு தக்ஷிணேசுவரம் வந்து சேர்ந்தார். அச்சமயம் அவருக்கு வயது பத்தொன்பது.

ஒருநாள் கிருஷ்ண விக்கிரகத்துக்குப் பூஜைசெய்துவந்த இன்னொரு அர்ச்சகன், பூஜை முடிந்த பிறகு துயிலமர்த்தப் பள்ளியறைக்கு அவ்விக்கிரகத்தைத் தூக்கிக் கொண்டு போகும்போது, கால் வழுக்கிக் கீழே விழுந்தான். அதனால் அவ்விக்கிரகத்தின் ஒரு கால் ஒடிந்து ஊனமடைந்தது. அதை அறிந்த ராணி மிகவும் வருத்தமடைந்தாள். ராணியின் மருகரான மதுரபாபு என்பவர் ஆலயத்தின் தருமகர்த்தாவாய் இருந்தார். மதுரபாபுவும் மிகக்கவலையுற்று வருந்தலாயினர். பிறகு அவ்விருவரும் சாஸ்திரங்களில் தேர்ந்த பல பண்டிதர்களை வரவழைத்து, அதற்குப் பரிகாரம் என்ன என்று கேட்டார்கள். பண்டிதர்கள் யாவ

ரும் ஒன்றுகூடி யோசித்து, ஊனமாய்ப் போன சிலையைக்கங்கையில்போட்டுவிட்டுப் புதிதாய் ஒருசிலை அதுபோல் செய்து பிரதிஷ்டை செய்வதே உத்தமம் என்று சொன்னார்கள். அதுதான் சாஸ்திர நீதி என்று எல்லாரும் கூறினார்கள். பண்டிதர்கள் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த இராமகிருஷ்ணர் உடனே கொல்லென்று சிரித்தார். "நீர் யாது காரணத்தால் இப்படிச் சிரிக்கின்றீர்" என அருகிலிருந்தவர்கள் அவரைக் கேட்டார்கள். அதற்கவர் பின்வருமாறு பதில் அளித்தார்: "பேஷ்! பண்டிதர்கள் சொன்ன பரிகாரம் வெகு அழகு! என்ன ஆச்சரியம்! ராணியினுடைய மருமகனுக்கு ஏதோ அசந்தர்ப்பத்தால் அடிபட்டு ஒரு கால் சற்று ஊனமாய்ப் போய் விட்டதென்று வைத்துக் கொள்வோம்; அந்த மருமகனைத் தள்ளிவிட்டு வேறொரு மருமகனை ராணி தேடுதல் கூடுமா? இது வரைக்கும் அன்போடு வழிபட்டுவந்த விக்கிரகத்தைத் தண்ணீரில் எறிந்துவிடுவதற்கு உங்களுக்கு மனமும் துணிந்ததே! எப்படியாவது பழுதுபார்த்துப் பழைய விக்கிரகத்

தையே போற்றிப் பூஜை செய்வதல்லவா முறை?" அவரது ஞானம் நிறைந்த இவ் வார்த்தைகளைக் கேட்ட ராணியும் அவளது மருமகனுன மதுரபாபுவும் மற்றுள்ளோரும் ஆச்சரியமடைந்து, அவரை மிகவும் மெச்சி, அவரது கைத்திறமையைக் கொண்டே அக் காரியத்தையும் செய்வித்துச் சந்தோஷம் அடைந்தனர். இராமகிருஷ்ணருடைய பக் திக்குச் சமானமான பக்தி உள்ளவர் யாரும் இல்லை என்று கண்ட மதுரபாபு காளிதேவிக் குப் பூஜை செய்யும் முக்கிய அர்ச்சகராக அவரை அமர்த்தத்தக்க சமயத்தை எதிர் பார்த்திருந்தார்.

சில ஆண்டுகளிலே இராமகுமாரர் நோய் வாய்ப்பட்டு மரணமடைந்தார். அதன்பின் னர் இராமகிருஷ்ணர் அன்னை காளி தேவிக்குப் பூஜை செய்யும் அரும்பணி பூண் டார். அவர் பூஜை செய்யத் தலைப்பட்டது முதல் ஆலயமானது புதிய உயிர் பெற்றுப் பொலிவுற்றது ; எங்கும் தெய்வ மணம் வீசி யது. அவர் செய்த பூஜையைக் கண்டவர் ஆச்சரியம் அடைந்தனர். அவர் பக்தியில் முதிர்ந்து பித்தரைப்போல் ஆனார். முறைப்

படி பூஜை செய்வது அவருக்கு இயலவில்லை. கடவுள் நினைவிலேயே கருத்து நிலைத்தவராய், தம் உடம்பை மறந்து வெளி நினைவு இல்லாது நெடுநேரம் நின்றுவிடுவார். எதிரே இருப்பது விக்கிரகம் என்று அவர் எண்ணவில்லை. அதனை உயிருடன் கூடிய தேவி யன்னையின் உருவெனவே கருதி அதனுடன் கொஞ்சி விளையாடுவார்; அதற்கு அமுது படைப்பார்; அமுதை எடுத்து வாயிலே திணிப்பார்; அன்புடன் பாடுவார்; கையைப் பிடித்துக்கொண்டு ஆடுவார்: மணியை ஆட்டிக்கொண்டே தீபாராதனை செய்வார்; இப்படியே நீண்டநேரம் கழிந்துவிடும். இதையெல்லாம் கண்ட கோயில் காவலாளரும் மற்ற வேலையாளரும் அவரைப் பித்தர் என்று முடிவு செய்தனர். வேகமாய் ஓடித் தர்மகர்த்தாவிடம் நடந்தவற்றைச் சொல்லிப் பூஜைக்கு வேறு ஆள் அமர்த்த வேண்டுமென்று முறையிட்டனர். இராமகிருஷ்ணரது நடத்தை விபரீதமாகக் காணப்பட்டாலும், மதுரபாபு, அவரது பூஜையின் சிறப்பையும் அவரது பக்தியின் பெருக்கையும் அறிந்தவர் ஆதலால், காவ

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

லாளரைத் தேற்றி, 'நானே நேரில் வந்து பார்க்கிறேன்," என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார். அவர் நேரில் வந்து பார்த்தபோது இராமகிருஷ்ணரைப்பற்றி அவர்கொண்ட அபிப்பிராயம் இன்னும் உறுதிப்பட்டது. இவரைப்போல் பக்திமான் வேறொருவரைக் காணமுடியாது என்று அவர் தீர்மானித்தார். இவர் இந்தக் கோயிலில் பூஜைசெய்யும்படி நேர்ந்ததால், கோயில் கட்டியதின் நோக்கம் நிறைவேறி விட்டது என்று எண்ணிச் சந்தோஷம் அடைந்தார். மதுர பாபுவுக்கு இராமகிருஷ்ணரிடம் வரவர அதிகமான அன்பும் மரியாதையும் ஏற்பட்டது.

இதற்குள் இராமகிருஷ்ணர் பித்தர் ஆனூர் என்னும் செய்தி ஊரெங்கும் பரவிற்று. இச் செய்தியைக் கேள்வியுற்ற தாய் சந்திரமணி தேவி மிகவும் வருத்தம் அடைந்தாள். வயது முதிர்ந்த காலத்தில் தான் தன் அருமைக் குமாரனைக் காண அதிக ஆசை கொண்டிருப்பதாகக்கூறி, ஆள்விட்டனுப்பி காமார்ப்புகூர்க்கு அவரை அழைப்பித்தாள். தாய் சொல் தட்டாது இராமகிருஷ்ணரும்

ஊரை அடைந்தார். அவருக்கு அப்பொழுது வயது இருபத்து மூன்று. அவருடைய பைத்தியத்தைத் தெளிவிக்க என்ன செய்வதென்று யோசித்துத் தாயும் அவருக்குக் கலியாணம் செய்விப்பதென்று தீர்மானித்தாள். இராமகிருஷ்ணர் தாயின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, ஐந்து வயதுடைய **சாரதா தேவி** என்னும் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டார். கலியாணம் செய்தால் கடவுள் பைத்தியம் போய்விடும் என்று கருதிய தாயின் எண்ணம் நிறைவேறவில்லை. அவர் அதிக நாள் ஊரில் தங்கவில்லை. பக்திக் கனல் கொழுந்து விட்டெரிந்து அவரது உள்ளத்தை வாட்டியது. அவர் திரும்பவும் தக்ஷிணேசுவரம் சென்று தேவியைப் பூஜிக்கலானார்.

தேவியின் தரிசனத்தைப் பெற இச்சித்தார் அடிக்கடி தியானத்தில் மூழ்கினார். கடவுளைக் கண்ணாரக் காணவேண்டும் என்னும் அவா அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவர் உறக்கத்தை விட்டார்; உணவை மறந்தார். அவரது உடல் மெலிந்தது. இரவெல்லாம் தனித்திருந்து நிஷ்டை

புரிந்தார். பலநாள் இரவு நேரங்களில் அவரைக் காணுமையால், அவருடன்கூட அக்கோயிலில் வசித்திருந்த இருதயர் என்பவர் ஆச்சரியப்பட்டவராய், ஒருநாள் இராத்திரி அவரைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். இருதயர் இராமகிருஷ்ணருக்கு நெருங்கிய உறவினர். கோயில் எல்லைக்குள் மரம் செடி அடர்ந்த காடு ஒன்று உண்டு. அக்காடு எப்போதும் இருள் சூழ்ந்திருக்கும். ஒரு காலத்தில் அது மயானமாய் இருந்தபடியால், அங்குப் பகலிலுங்கூட யாரும் போகத் துணியமாட்டார்கள். நடுராத்திரியில் இராமகிருஷ்ணர் அக்காட்டுக்குள் நுழைந்து நீண்டநேரம் அங்கே இருந்ததை இருதயர் பார்த்தார். அவருக்குப் பெரு வியப்பு உண்டாயிற்று. "இது என்ன நெஞ்சழுத்தமோ, பேய்க் குணமோ, அல்லது உண்மையிலே பயித்தியம்தான் பிடித்துவிட்டதோ?" என்று இருதயர் சந்தேகப்பட்டார். பயமுறுத்தி எப்படியாவது அவரை இனி அங்கே போகாமல் செய்து விடவேண்டுமென்று நினைத்தவராய் இருதயர் அந்தத்திக்கை நோக்கிப் பல கற்களை

வீசி எறிந்தார். ஆனாலும் அவர் எண்ணம் பலிக்கவில்லை. இராமகிருஷ்ணர் கொஞ்சமாவது அஞ்சினதாகக் காணப்படவில்லை. அவர் வனத்தில் அந்த இருட்டு வேளையில் என்னதான் செய்கிறார் என்று பார்க்கக் கருதின இருதயர் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு போனார். ஆச்சரியம்; அங்கே நடுக்காட்டிலே, கட்டியிருந்த துணியையும் மேலேபோட்டிருந்த பூணூலையும் ஒருபக்கம் கழற்றி வைத்துவிட்டுக் கண்ணை மூடித் தியானத்தில் அமர்ந்திருந்தார். கூப்பிட்ட குரலுக்கும் ஏனென்று கேட்கவில்லை. கல்லைப் போல் அசையாது உட்கார்ந்திருந்தார். இந்த விபரீதமான செயலுக்குக் காரணம் யாதென்று அடுத்தநாள் காலையில் இருதயர் இராமகிருஷ்ணரைக் கேட்டார். அதற்கு அவர், "தியானத்துக்கு இடையூறாய் இருப்பவைகளில் ஜாதி அபிமானமும் ஒன்று. 'நான் பிராம்மணன், உயர்குலத்தான்' என்கிற எண்ணம் சிறிதும் இல்லாமல் குழந்தையைப்போன்று இருப்பவன்தான் கடவுளை அடையமுடியும். ஆகையால் நான் தேவியைத் தியானம் செய்யும்போது

பூணூலையும் கழற்றிவைத்து விடுகிறேன்,'' என்றார்.

அம்பாளின் தரிசனம் பெறுவது எப்படி என்ற ஒரே எண்ணம் இரவும் பகலும் அவரது மனத்தை வாட்டிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும், சாயங்காலம் ஆனவுடனே, "ஐயோ, இன்றைக்கும் ஒருநாள் வீணில் கழிந்துவிட்டதே! தாயே, நீ என் கண்முன் நின்று காட்சி கொடுப்பது எந்த நாளோ?'' என்று கதறுவார்; அழுது புலம்புவார்; முகத்தைத் தரையில் மோதித் தேய்த்துக் கொள்வார் ஒருநாள் இரவில், அவர் தேவியின் சந்நிதியில் நின்று, "அன்புடைய தாயே! அருள்மழை பொழியும் அம்பிகையே! அடியார்க்கு இரங்கும் அன்னையே! நான் என்ன செய்வேன்? இனி ஒரு நிமிஷமும் தரியேன். தேவீ! நீ இருப்பது உண்மையா? உண்மை என்றால் ஏன் என்னால் உன்னைக் காணமுடியவில்லை. கடவுள், கடவுள் என்று கூறுவதெல்லாம் வெறும் கற்பனை தானோ? இல்லை, இல்லை; எத்தனை அடியார்களுக்கு நீ காட்சி கொடுத்து இன்பம் தந்திருக்கிறாய்! ஆ! நான்மட்டும்

பாவியோ? தகுதி அற்றவனோ? அற்றவன் ஆயினும் உன் கருணையால் எனக்கு உன் காட்சியை அளிக்கலாகாதா? நீ மனம் வைத்தால் நான் பரிசுத்தன் ஆகமாட்டேனோ? ஆ! தேவீ! இனி நான் உயிருடன் இருப்பது ஏன்?" என்று கூறித் தம்மை மறந்து தாவிக் குதித்து அங்குச் சுவரில் தொங்கிய வாள் ஒன்றை எடுத்துத் தம்மை மாய்த்துக்கொள்ள எண்ணினார். அந்த க்ஷணமே தெய்வக் காட்சியில் அவர் மூழ்கிக் கீழே விழுந்தார். எங்கும் இன்பமயமாய், ஏக உருவாய் ஜோதி வடிவு ஒன்று நிறைந்திருப்பதைக் கண்டார்; ஆனந்தக் கடலில் மூழ்கிவிட்டார். இரண்டுநாள் அப்படியே, உலக நினைவு ஒன்றுமே இல்லாமற் கிடந்து, பிறகு "அம்மா! அம்மா!" என்று அழைத்துக்கொண்டே விழித்து எழுந்தார்.

இவ்வாறு அன்று கண்ட காட்சியை அவர் என்றும் காணவேண்டுமென்று ஆசைப்பட்டார். "என் தாயே! நான் உன்னைப் பிரிந்து உயிர்வாழ மாட்டேன். உன்னையல்லாது இந்த உலகத்தில் எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லை" என்று

மனம் உருகி அழுதவண்ணமாய் இருந்தார். முன்னைவிடத் தியானத்திலும் நிஷ்டையிலும் அதிகமாய் ஈடுபடலானார்; கடுமையாகத் தவம் செய்யத் தலைப்பட்டார். நிஷ்டையில் அமரும்போது வெறும் கட்டைபோலக் காணப்படுவார். சில வேளை சிரிப்பார். உலகமாதாவுடன் இருக்கும்போது, சேலையைப் பிடித்துக்கொண்டு ஒரு குழந்தை குதித்து விளையாடுவதுபோல ஆனந்தக்கூத்தாடுவார். தேவி தன்னுடன் இருப்பது போலவும், உரையாடுவது போலவும் ஏதேதோ பேசிக்கொண்டும் பதில் சொல்லிக்கொண்டும் இருப்பார். இவர் தேவிக்குப் பூஜைசெய்யும் முறைகள் இன்னும் விபரீதம் ஆகிவிட்டன. ஆடுவதும், பாடுவதும், பேசுவதும், சிரிப்பதுமாகவே பொழுதெல்லாம் போக்குவார். நைவேத்தியத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, "அம்மா! சாப்பிடு, சாப்பிடு," என்று ஊட்டுவார்; உடனே, "நானுமா சாப்பிடவேண்டும்," என்று தாமும் வாயில் கொஞ்சம் போட்டுக் கொள்வார். "இப்பொழுது நீ சாப்பிடு," என்று மறுபடியும் தேவிக்கு ஊட்டுவார். சுருங்கச்

சொன்னால், இவர் பூஜை செய்தபோது அங்கிருந்த விக்கிரகம் கற்சிலையாய் இல்லாமல் இவரோடு கொஞ்சிவிளையாடும் உயிருள்ள அன்னையின் உருவாகவே விளங்கிற்று.

இடையிடையே சில சமயங்களில் இவருக்குச் சந்தேகமும் வந்ததாம். "உள்ளபடியே நான் காண்பது கடவுட் காட்சிதானா? அல்லது என்னுடைய மனோ கற்பனையால் விளைந்ததா? உள்ளபடி நான் பேசுவது தேவியினிடத்திலா? அல்லது நான் பேசுவதும் ஆடுவதும் பாடுவதும், ஊரார் எல்லாம் சொல்வது போலப் பைத்தியத்தினலா? தேவி என்னைக் கருணையோடு பார்ப்பதும், என்னோடு பேசுவதும், கொஞ்சுவதும், இன்பம் கொடுப்பதும், இதெல்லாம் கூட ஒருவேளை என் கற்பனைதானோ? இம்மாதிரியான எண்ணங்கள் இவர் மனத்திலே தோன்றினவுடனே, இவர் துக்கம் மேலிட்டவராய் உடனே தேவியின் சந்நிதிக்கு ஓடுவார். "தாயே! உண்மையை எனக்குச் சொல். நான் ஊரார் சொல்வது போலப் பைத்தியக்காரனா? அல்லது உள்ளபடி உன்னைக் காண்பதால் இவ்விதம் இருக்கின்

றேனா? எல்லாம் என் மனோ கற்பனையா, அல்லது இதெல்லாம் நிஜந்தானா?" என்று ஒரு குழந்தையைப்போல அழுதுகொண்டே முறையிடுவார். சற்று நேரத்திற் கெல்லாம் உண்மை தெரிந்தவர்போலத் தேவியால் தேறுதல் சொல்லித் திருப்தி யளிக்கப்பட்டவர் போலச் சந்தோஷத்துடன் திரும்பிவருவார். பூரிப்பினால் அவர் நெஞ்சு சிவக்கும்; முகம் மலரும். அவரை அறியாமல் அவர் ஆனந்த நடனம் செய்வார். ஒருநாள் பூஜையறையில், அவருக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் உண்டாகி, கொஞ்சம் மெல்லிய நூலை எடுத்துத் தேவியின் மூக்குக்கு நேரே பிடித்துப்பார்த்தாராம். அந்த நூல் தேவியின் மூச்சினால் ஆடக்கண்டு ஆநந்தப்பட்டாராம்.

கோயில் பூஜையை இராமகிருஷ்ணர் நீடித்துச் செய்ய முடியவில்லை. எப்போதும் பக்தி பரவசத்தில் நிலைத்து விடுவாராதலால், பூஜையை மற்ற அர்ச்சகர்கள் செய்ய வேண்டியதாயிற்று.

இராமகிருஷ்ணர் தம்மை அனுமானைப் போலப் பாவித்துக்கொண்டு பக்தி செய்து இராமபிரானை வழிபடலானார். அப்போது

ஸ்ரீராமசந்திரனைக் கண்டு களித்தார். ஒரு நாள் ஸீதாதேவி இவர்முன் தோன்றி உடலுக்குள்ளே மறைந்துவிடக் கண்டார். கடவுள் பாலராமனாக வந்து இவருடன் பல நாள் விளையாடிக் கொண்டிருந்தார். பிறகு இவர் சிவபெருமானை வணங்கிச் சிலகாலம் வழிபட்டுவந்தார். சிவபெருமான் காட்சி கொடுத்துக் களிப்படையச் செய்தார்.

சிலநாள் மதுரபாவ சாதனை வழியிலே நிற்பவராகித் தம்மை ராதையைப்போலப் பாவித்துக்கொண்டு கிருஷ்ணனைக் காண வேண்டுமென்று அன்புடன் பாடியும் ஏக்கத்துடன் வாடியும் கிருஷ்ணனது வரவை எதிர் பார்த்துக்கொண்டே இருந்தார். அச்சமயத்தில் அவரது நடையுடை பாவனை எல்லாம் உண்மையிலே பெண்பாலாருடைய நடையுடைபாவனைபோல் ஆய்விட்டதென்று கண்டவர் சொல்லுகின்றனர். கோபாலனைப் போல அவர் தாமே ஓடி ஆடி விளையாடியதும் உண்டு. அவர் பலவிதமான தெய்விகக் காட்சிகளையும் ஈசுவரனுடைய வடிவங்களையும் கண்டார் என்பதை அவருடைய வார்த்தைகளி லிருந்தே அறிகின்றோம்.

உலகப் பொருள்களிடத்தில் ஆசை முற்றிலும் அற்றவர்களுக்குத்தான் கடவுளிடத்தில் உண்மையான ஆசை உண்டாகும் என்று இராமகிருஷ்ணர் கூறுவார். உலக ஆசைகளுக்கெல்லாம் காரணமாயும் அடிப்படையாயும் இருப்பவை காமஉணர்ச்சியும் காசாசையுந்தான் என்று அவர் எடுத்துச் சொல்லுகிறார். இவ்விரண்டும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சிறிதளவும் இருக்கவில்லை. பெண்களை யெல்லாம் அவர் தாயெனக் கருதுவார்; அவர்கள் அனைவரும் ஜகன் மாதாவின் வடிவங்களே என்று கூறி வணங்குவார். அவர் காசைக் கையில் எடுத்துக்கொண்டுபோய்க் கங்கைக் கரையில் நின்று கொள்வார். ஒரு கையில் காசையும் மற்றொரு கையில் ஒரு பிடி மண்ணையும் எடுத்து வைத்துக்கொண்டு, "மண்ணிலிருந்து காசு உண்டாகிறது; காசிலிருந்து மண் உண்டாகிறது. அதாவது, பூமியிலிருந்து விளையும் பொருள்களை விற்றால் திரவியம் கிடைக்கிறது; ஒருவனிடம் திரவியம் இருந்தால் பூமியை விலைக்கு வாங்கலாம். ஆகையால் மண்ணும் பொன்

னும் ஒன்றே; பொன்னும் மண்ணும் ஒன்றே," என்று சொல்லிக் கொண்டே இரண்டு கையிலிருப்பதையும் மாற்றி மாற்றிக் கொட்டிக் கடைசியில், "இவை எனக்கு வேண்டாமென்று," இரண்டையும் கங்கையில் எறிந்து விடுவார். இந்தச் சாதனையின் பலனாக, அவரிடம் உலகப் பற்று என்பது சிறிதும் இல்லாமல் ஒழிந்து விட்டது. அதுமுதல் காசைத் தொட்டால் அவர் உடம்பு கூசும். அறியாமல் அவர்மீது பட்டாலும் அவர் தாங்கமுடியாமல் துள்ளி விழுவார். இதை அவருடைய சிஷ்யர்கள் சோதித்து அறிந்திருக்கிறார்கள்.

பிற்காலத்தில் இராமகிருஷ்ணருடைய புகழ் எங்கும் பரவியபோது பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் அவரைக்காண வருவதுண்டு. அப்படி வந்தவர்களில் ஒருவனான செல்வம் மிகுந்த மார்வாரி ஒருவன் அவருடைய ஸேவைக்காகப் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாகக் கூறினான். அவ்வார்த்தை இராமகிருஷ்ணரது தலையை வாளால் அறுப்பதுபோல் இருந்தது. அவர் அவ்வார்த்தையினால் மூர்ச்சை அடைந்தார்.

மூர்ச்சை தெளிந்ததும், அவர் கோபக் குரலோடு, "அடே, இந்த அறையை விட்டு உடனே வெளியே போ! செல்வத்தைக்காட்டி என்னை மயக்கி, இந்த மாயப் பிரபஞ்சத்துக்குள் இழுக்கவா பார்க்கிறாய்?" என்று கத்தினார்.

இராமகிருஷ்ணர் கடுமையாகத் தவம் புரிந்துவந்தபோது அவரது உடம்பானது மிகவும் மெலிந்துவிட்டது. பலங்குன்றியவராய் நோயால் வருந்தவும் நேரிட்டது. உடம்பெல்லாம் ஒருவகை எரிச்சலுண்டாக அதனால் அதிக கஷ்டமடைந்தார். இராமகிருஷ்ணரிடம் அதிக அன்பு பூண்ட மதுராபாபுவுக்கு அவர் கஷ்டப்படுவதைக் காணச் சகிக்கவில்லை. இராமகிருஷ்ணரின் உடல் நலிவுக்குக் காரணம் அவர் அனுசரித்து வந்த வழுவாத பிரம்மசரிய விரதமே என்று அவரும் மற்றவர்களைப்போல் நினைத்தார். அவர் ஒருதரம் சிற்றின்ப சுகத்தை அனுபவித்தாரானால், தேகசுகம் பெறுவார் என்று உலக ஜனங்களுடைய ஞானமில்லாத கருத்தை மதுராபாபுவும் கொண்டார். ஆனால் இந்த அபிப்பிராயத்தை இராமகிருஷ்ண

ரிடம் தெரிவிப்பதற்கு அஞ்சி, அவருக்குத் தெரியாமல் அவரைச் சிற்றின்பத்தில் ஆழ்த்திவிட வேண்டுமென்று தீர்மானித்து அதற்கான சூழ்ச்சி ஒன்றைச் செய்யலானார். ஓரிரவு இராமகிருஷ்ணர் தம்அறையில் தனியாய் இருக்கும்போது வேசிகள் இருவரை அறைக்குள்ளே போகவிட்டு அவரைத் தங்கள் வலைக்குள் விழச் செய்யும்படி ஏவினார். ஆனால் இராமகிருஷ்ணர் அவர்களைப்பார்த்தவுடனே, "அம்மா!" என்று அழைத்துக் கொண்டே ஜகன்மாதாவை நினைத்து, அந்த நினைவிலே நிலைத்து நின்றுவிட்டார். அதைக்கண்ட வேசிகள் இருவரும் வெட்கத்துடன் வெளியே சென்றார்கள். இன்னொரு முறையும் மதுரபாபு இதேமாதிரி தந்திரம் செய்து முயன்று பார்த்தார்; அப்பொழுதும் அவருடைய எண்ணம் நிறைவேறவில்லை. பெண்களைப் பார்த்தவுடனே இராமகிருஷ்ணர் அவர்களைத் தெய்வமாக வணங்கித் தாம் ஒரு பாலகனைப்போல் ஆகி விடுவார். மதுரபாபுவுக்கு அதனால் வெட்க முண்டாயிற்று. அவர் தம் அறியாமையை உணர்ந்து, அம்முயற்சியை விட்டுவிட்டார்.

இராமகிருஷ்ணரின் வைராக்கிய சீலத்தை அறிந்து ஆச்சரியப்பட்டார்; அவரிடம் இன்னும் அதிகமாகப் பக்திபூண்டவராய் வணக்கத்துடன் ஒழுகலானார்.

கடவுளை உருவத்தோடு எவ்வாறு கண்டு களித்தாரோ, அவ்வாறே அருவமாகவும் கண்டார். மேலும் கிறிஸ்துமதம், இஸ்லாமிய மதம் முதலான பல சமயங்களினுடைய மார்க்கங்களைப் பின்பற்றி, அவை யாவும் ஒரே முடிவாகிய பொருளையே அடைகின்றன என்று கண்டு தெளிந்தார். அதனாலே சர்வ சமய சமரசத்தை அவர் உலகிற் பரவச் செய்யலானார். அவர் பலவழிகளில் சமய சாதனைகளைப் பயின்றகாலத்து, அவ்வப் போது அவர்க்கு உபதேசம் செய்த ஆசிரியர் பலர். அவர்களுள் பைரவி பிராம்மணி என்னும் ஒரு ஸ்த்ரீயும், தோதாபுரி என்னும் ஒரு ஞானியும் முக்கியமானவர்கள். தந்திர சாஸ்திர விதிகளின்படி, இராமகிருஷ்ணர் பைரவி பிராம்மணி என்ற அம்மையாரின் உதவியைக் கொண்டு, சாக்த சாதனைகளை வெற்றிகரமாகச் செய்து முடித்தார். இந்த அம்மையார் குருவாக இருந்து அவருக்கு

உதவிபுரிந்ததோடு, தாயைப்போல் அவ ருக்கு அன்னமளித்தல், உடம்புக்குக் கேடு வராமல் காத்தல் முதலான காரியங்களையும் செய்துவந்தனர். தோதாபுரி என்பவர் ஒரு நிர்வாண சந்யாஸி. மூன்று நாளைக்குமேல் ஓரிடத்திலே தங்கமாட்டார். இவர் தக்ஷி ணேசுவரத்துக்கு வந்தபோது, இராமகிருஷ்ணரை அங்குக் கண்டார். கண்டதும் அவ ருடைய பரிபக்குவ நிலையைக்கண்டு ஆச்சரி யப்பட்டார். அவர் இராமகிருஷ்ணரை நெருங்கி, "அப்பா, உன்னைப் பார்த்தால், உயர்ந்த சந்யாஸ தர்மத்துக்குரிய தன்மை யும் மேலான அத்வைத ஞானத்தைப் பெறு தற்குரிய பரிபக்குவமும் உள்ளவனாகக் காணப்படுகிறாய். உனக்கு விருப்பமானால் அந்த ஞானோபதேசத்தை யான் அளிக்கி றேன்," என்று உரைத்தார். அதைக் கேட்ட இராமகிருஷ்ணர், "எனக்கு ஒன் றும் தெரியாது; என் தாய் ஜகன்மாதா வின் இஷ்டப்படிதான் யான் நடப்பேன்," என்றார். பிறகு அவர், "தேவியின் இஷ் டத்தைக் கேட்டு வருகிறேன்" என்று கோவிலுக்குள் ஓடிச்சென்று சற்றுநேரம்

கழித்துத் திரும்பி வந்தார். வந்தவர், "தேவி உத்தரவு கொடுத்து விட்டாள். தாங்கள் எனக்கு ஞானோபதேசம் செய்யுங்கள்," என்று தோதாபுரியை வேண்டிக் கொண்டார். அதன்பின் தோதாபுரி கோயிலின் அருகில் உள்ள பஞ்சவடி என்ற இடத்தில், வைதிக விதிப்படி ஓமச்சடங்குகள் செய்து முடித்து இராமகிருஷ்ணருக்கு சந்யாஸம் அளித்து ஞானோபதேசம்செய்து தியானத்தில் அமரச் செய்தார். தியானம் கைகூடப்பெற்ற இராமகிருஷ்ணர் ஞான நிலையில் உயர்ந்த படியான நிர்விகற்ப சமாதியில் அப்படியே நிலைத்துவிட்டார். இதைக் கண்ட தோதாபுரிக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகிவிட்டது. தாம் நாற்பது வருஷங்கள் கடுந்தவம்செய்து அடைந்த நிர்விகற்ப சமாதியாகிய அந்த ஞானநிலையைத் தம் சிஷ்யராகிய இராமகிருஷ்ணர் உபதேசம் பெற்ற உடனேயே அடைந்துவிட்டாரே என்று ஆச்சரியத்தோடு ஆனந்தமும் அடைந்தார். அதனால் மூன்று நாளைக்குமேல் ஓரிடத்தில் தங்காத அப்பெரியார் சுமார் பதினொரு மாதங்கள் தக்ஷிணேசுவரத்தில்

தங்கியிருந்தார். உருவக் கடவுளினிடத்து நம்பிக்கை யில்லாதவராயிருந்த தோதாபுரி இராமகிருஷ்ணரின் மூலமாக அவ்வுண்மையை உணர்ந்துகொள்ளும்படி நேர்ந்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பெரிய மகான் என்று யாவரும் கொண்டாடினர். ஆயினும் அவர் தானென்னும் அகந்தை சிறிதளவும் இல்லாத பரிசுத்தராய் இருந்தார். ஒரு நாள் அவர் தம்மையே சோதிக்கக் கருதினுர். தாம் பெரியவர் என்ருவது உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்ருவது எண்ணும் எண்ணம் சிறிதேனும் தம்மிடம் உளதோ என்று காண அவர் நினைத்தார். அவ்வூரின் அருகில் ஒரு புறத்தில் குடியிருந்த தீண்டாதான் ஒருவனுடைய குடிசைக்குச் சென்று, யாரும் இல்லாத வேளையில், அவன் மலங்கழிக்கும் இடத்தைத் தம் கையால் சுத்தி செய்து தலைமயிரைக் கொண்டு தேய்த்துக் கழுவினுர். அவ்விதம் செய்த பின்னர்த் தம்மிடம் அகங்காரம் இல்லையென்று திருப்தியுற்றவர் ஆனுர்.

ஒருசமயம் மதுரபாபு தம் குடும்பத்தினரோடு காசி, பிருந்தாவனம் முதலிய புண்

ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்ருர். அப்போது இராமகிருஷ்ணரையும் கூட அழைத்துப் போனுர். இடைவழியில் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருந்த ஓர் ஊரைக் கண்டார்கள். அப்போது இராமகிருஷ்ணர் மதுரபாபுவை நோக்கி, "அன்பரே! வறுமை நோயால் தவிக்கும் இம்மக்கள் அனைவருக்கும் வயிருர ஒருநாள் உணவளித்து, ஒவ்வொருவருக்கும் ஒரு ஆடை கொடும்" என்ருர். மதுரர், "ஐயனே! காசி யாத்திரைக்குக் கொண்டுவந்த பணத்தை இங்கு வழியில் செலவிட்டு விட்டால், நாம் நமது யாத்திரையை முடிப்பது எப்படி?" என்ருர். அதற்கு இராமகிருஷ்ணர், "அப்படியானுல், நீங்கள் காசிக்குப் போங்கள்; கடவுளின் வடிவங்களாயிருக்கும் இந்த ஏழை மக்களுடன் நான் இருப்பேன்," என்றுகூறி வேகமாய் நடந்து அவர்கள் மத்தியில் போய்ச் சேர்ந்தார். உடனே கல்கத்தாவுக்குத் தந்திகள் பறந்தன; துணி மூட்டைகளும் பணமும் வந்து குவிந்தன; ஏழைகளுக்கு வயிருர உணவு அளிக்கப்பட்டது. புதிய ஆடைகளும் வழங்

கப்பட்டன. அதன்பிறகு இராமகிருஷ்ணர் காசிக்குச் சென்ருர். காசி, பிருந்தாவனம் முதலிய இடங்களுக்குச் சென்று யாத்திரையை முடித்துக்கொண்டு தக்ஷிணேசுவரம் வந்து சேர்ந்தார்.

ஆறு வயதாயிருந்த இளம்பருவத்தில் இராமகிருஷ்ணரை விவாகம் செய்துகொண்ட சாரதாதேவி தாய்வீட்டிலே வளர்ந்து வந்தனர். வயதாக ஆகத் தேவியார் தம்கணவரைப் பற்றிய பல செய்திகளைக் கேட்டு, "எப்போது அவரைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்குமோ" என்று எண்ணியவராய் இருந்தனர். தேவியார்க்குப் பதினெட்டு வயதாயிற்று. இராமகிருஷ்ணரைக் காணுமலும் அவர் காலடியை வணங்காமலும் இனி ஒரு கணமும் இருக்க முடியாதென்று எண்ணிய அம்மையார் தம் தந்தையின் துணையைக்கொண்டு தக்ஷிணேசுவரம் வந்து அடைந்தனர். தம்மை நாடிவந்த தம் மனைவியான சாரதா தேவியை அவர் அன்புடன் வரவேற்று உபசரித்தார். எனவே தேவியார் மிகவும் சந்தோஷம் அடைந்தனர். ஆனல் இராமகிருஷ்ணர் தம்

மனத்தில் சிறிது கவலை கொண்டவர் ஆனார். ஏனென்றால், மங்கையர் அனைவரையும் ஜகன்மாதாவின் வடிவங்களாகக் காணும் தன்மையுடைய அவர் சாரதா தேவியை மனைவி என்ற முறையில் எவ்விதம் நடத்தமுடியும்? ஆனால் அவரது கவலையைச் சாரதாதேவியார் ஒரு கணத்தில் நீக்கிவிட்டனர். தெய்வத்தன்மை வாய்ந்த அம்மகானை தாம் உலக மையலில் விழச்செய்யும் எண்ணத்தோடு வரவில்லை என்றும், ஒரு சிஷ்யரைப்போல் இருந்து சேவைசெய்யும் நோக்கத்துடனே வந்ததாகவும் தேவியார் கூறியதைக்கேட்டு இராமகிருஷ்ணர் அளவிறந்த மகிழ்ச்சியை அடைந்தார். அவ்வாறே தேவியாரும் அவருடனே இருந்து எப்போதும் தொண்டுசெய்து வந்தனர். இருவரும் காமத்தைவென்ற ஞானியராய்த் தெய்வத்தன்மை ஓங்கப்பெற்று இருந்தாராதலினாலே, மனமானது கடவுளிடத்தில் லயிக்கத் தேகபுத்தி முற்றிலும் இழந்தவராயிருந்தனர். உலக மக்களைப்போல் இவ்விருவரும் ஒரு நொடிநேரமாவது கணவன் மனைவி என்ற முறையில் வாழ்ந்த தில்லை.

கல்கத்தாவிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் இராமகிருஷ்ணரைக் காண வந்தவர்கள் பல்லாயிரம் பேர். அவர்களில் ஒருவர் நரேந்திரர் என்பவர். அவர் இங்கிலீஷ் படிப்பில் தேர்ந்து முதன்மை பெற்றார். தாய்ப் பாஷையையும் நன்றாய்ப் படித்துத் தேர்ச்சி யடைந்தார். அவர் சுயநாட்டுச் சாஸ்திரங்களையும் வெளிநாட்டுச் சாஸ்திரங்களையும் நன்றாய்ப் படித்தவர்; நல்லொழுக்கம் உள்ளவர்; மாசில்லாத மனம் உடையவர். ஆனால் நவீன நாகரிகத்தாலும், கால வித்தியாசத்தாலும் கடவுள் இருப்பது உண்மையா என்று சந்தேகப்படலானார். கடவுளைக் காண வேண்டும் என்ற ஆசை அவருக்கு அதிகப்பட்டுக் கொண்டே இருந்தது. "கடவுள் இருப்பது உண்மையானால் யாரேனும் அவரைக் கண்டதுண்டா?" என்று எதிர்ப்பட்டவர்களிடம் எல்லாம் விதண்டாவாதம் செய்யத் தலைப்பட்டார். பிறகு ஒரு நாள் அவர் தமது உறவினர் ஒருவரால் தக்ஷிணேசுவரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நரேந்திரர் இராமகிருஷ்ணரை

அடைந்ததும் அவரை நோக்கி வழக்கம் போல், "ஐய! நீர் கடவுளைக் கண்ட துண்டா?" என்று கேட்டார். கேட்டு வாய் மூடு முன்னே, இராமகிருஷ்ணர், "குழந்தாய்! நான் கண்டேன்; நீ காண விரும்பினால், உனக்கும் காட்ட வல்லேன்," என்று கூறினார். நரேந்திரர் அது கேட்டுத் திடுக்கிட்டுப் போனார். ஏனென்றால் இம் மாதிரியான பதிலை அவர் எதிர் பார்த்தவர் அல்லர். இதற்கு முன்னால் யாரும் இப்படிப் பதில் சொன்னதும் கிடையாது. இராம கிருஷ்ணரால் இவ்வாறு உறுதி அளிக்கப் பட்டபோது அவர் அளவற்ற ஆச்சரியமும் ஆநந்தமும் அடைந்தார். பின்னர் நரேந் திரர் இராமகிருஷ்ணரைத் தமது குருவாக ஏற்று உயர்பதவி அடைந்தார். அவரே பிற் காலத்தில் **சுவாமி விவேகாநந்தர்** என் னும் பெயர் பெற்று உலகம் உய்யும்படி யான உபதேசங்களைச் செய்தவர். சுவாமி விவேகாநந்தருடன் இன்னும் பலரும் இராம கிருஷ்ணருக்குச் சிஷ்யர்களாகிச் சாதுக்கள் ஆனார்கள். இராமகிருஷ்ணருக்குக் கிரு கஸ்த சிஷ்யர்களும் அநேகம் பேர் உண்டு.

தவிர ஆயிரக்கணக்கான அடியார்களும் சாதுக்களும் மற்றையோரும் கடைசிநாள் வரையிலும் அவரிடம் வந்து அவரைத் தரிசித்து அவருடைய உபதேசங்களைக் கேட்டு நற்பதவி அடைந்தார்கள்.

குருநாதர் தமது 51-வது வயதில் உடலை விட்டுப் பிரிந்தார். அதன்பிறகு சுவாமி விவேகாநந்தர் தமது குருவின் பெயராலேயே ஒரு மடத்தை ஏற்படுத்தினார். அம்மடத்தின் கிளைகள் நமது நாட்டில் பல பாகங்களிலும், வெளிநாடுகள் சிலவற்றிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இம்மடங்கள் அங்கங்கே தொண்டு செய்துவருவது யாவரும் அறிந்ததேயாம்.

ஓம் சுபம்.